## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண். 38 /2016

வாதி தரப்பு 2வது சாட்சி நிஜாம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நிஜாம் | வயது | : | 42/2026 |
| தகப்பனார் பெயர் | : | ஹபீப் முகமது | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

நாள்-28.03.2026

வா.சா.2

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் பிராமிசரி நோட்டில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2) பிரதிவாதி, வாதிக்கு ரூ.19,65,000/- கொடுக்க வேண்டியிருப்பதால், அந்த தொகையை கேட்டு வாதி பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எனக்கு வாதி உறவினர் அல்ல. வாதி, பிரதவாதிகள் பற்றி எனக்கு தெரியாது. அவர்களது உறவு முறைகள், குடும்பத்தில் நடந்த நிகழ்வுகள் எனக்கு தெரியாது. பிராமிசரி நோட் எழுதி கொடுத்த விபரம் மட்டும்தான் எனக்கு தெரியும்.

4) அன்றைய தினம் நான் எதார்த்தமாக வாதியின் வீட்டிற்கு சென்றிருந்தேன். பிராமிசரி நோட்டில் கையெழுத்துபோட என்னை யாரும் அழைக்கவில்லை.

5) பிராமிசரி நோட்டில் முதல் சாட்சியாக நான் கையெழுத்து போட்டுள்ளேன். பிராமிசரி நோட் எழுதி முடித்த பிறகு நான் கையெழுத்து போட்டேன்.

6) பிராமிசரி நோட்டின் அச்சடித்த பகுதிகளை தவிர மற்ற விபரங்களை சேக் என்பவர் எழுதினார். ரொக்கமாக ரூ.19,65,000/-த்தை நாளது தேதியில் நான் பெற்றுக்கொண்டேன் என்று பிராமிசரி நோட்டில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) மேற்படி பணத்தை ரொக்கமாக கொடுக்கவில்லை.

8) பிராமிசரி நோட்டில் பணத்தை ரொக்கமாக கொடுத்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால், வங்கி மூலமாக பணம் கொடுத்ததாக சொன்னார்கள்.

9) பிராமிசரி நோட்டை வாதியின் பூர்வீக வீடான ஷேஷையா ரோட்டில் உள்ள அவரது வீட்டில் வைத்து எழுதினார்.

10) நான் வாதி வீட்டிற்கு ரியல் எஸ்டேட் சம்மந்தமாக பேசுவதற்காக போயிருந்தேன்.

11) பிராமிசரி நோட்டில் இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்ட நபரை எனக்கு நேரடியாக தெரியாது.

12) பிராமிசரி நோட்டை எழுதியதும், சாட்சியும் என்று கையெழுத்து போட்டவர் சேக். அவரை எனக்கு தெரியும்.

13) பிரதிவாதி அவரது வங்கி கணக்கில் பணம் வந்துவிட்டதாக சொன்னார். அதற்கு பிறகு தான் பிரதிவாதி கையெழுத்து போட்டார்.

14) வாதிக்கு இரண்டு பெண்ணோ, ஒரு பெண்ணோ உண்டு. அதில் யாரோ ஒரு மகள் இருந்தார். அது யார் என்று தெரியவில்லை.

15) வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற பண பரிமாற்றங்கள், அதன் விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் வாதிக்கு உறவினர் என்பதாலும், வாதி பின்னிட்டு தயாரித்த பிராமிசரி நோட்டில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

16) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகள் உண்மையில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.